# தமிழ் இலக்கியங்களில் மனித உறவுகள்



பதிப்பாசிரியர்

**அ. நித்யா**

| | | | |
|---|---|---|---|
| 18 | சங்க இலக்கியங்களில் காதல் உணர்வுகள் | முனைவர் ச. இராஜகுமாரி | 103 |
| 19 | குறுந்தொகை காட்டும் மனித உறவுகள் | கி. கிறிஸ்டல் சுஜி | 107 |
| 20 | இறைவனும் குரவரும் | முனைவர் சி. அற்புதராணி | 115 |
| 21 | சங்க இலக்கியங்களில் மனித உறவுகள் மற்றும் இல்லறம் | சீ.ரோ. சங்கீதா, டி.டீ .எட் , பி .லிட் , பி .எட் | 121 |
| 22 | சங்க இலக்கியங்களில் மனித உறவுகள் | ப. வீரன் | 126 |
| 23 | கொங்கு வேளாள மக்களின் குலதெய்வ வழிபாட்டில் மனித உறவுகள் | க. ஜெயலட்சுமி | 131 |
| 24 | முல்லைத்திணையில் தலைவன் தலைவி உறவுநிலை | கு. சந்தனமாரி | 139 |
| 25 | சிறிய திருமடலில் அம்மனை உறவு | ச. கிருத்திகா | 143 |
| 26 | அணிலாடும் முன்றிலில் குடும்ப உறவுகள் | ரா. ஸ்ரீபிரியா, எம்.ஏ., எம்ஃபில்., செட்.,நெட்., | 148 |
| 27 | தமிழ் இலக்கியங்களில் மனித உறவுகள் | ந. பாலமுருகன் | 154 |
| 28 | ஆண்டாள் பிரியதர்ஷினி சிறுகதைகளில் மனித உறவுகள் | ர. பாலதரணி | 159 |
| 29 | குருத்தோலை புதினத்தில் குடும்ப உறவும் சிதைவும் | பா. அஞ்சலி | 166 |
| 30 | சங்க இலக்கியத்தில் மனித உறவுகள் | முனைவர் த. கீதாஞ்சலி, எம்.ஏ.எம்;பில்.பிஎச்.டி. | 170 |
| 31 | அற இலக்கியங்களில் - தாய்மை நிலை | ப. கார்த்திக் | 176 |
| 32 | நற்றிணையில் மாந்தர்கள் | நா. ஸ்ரீ பிரியா | 184 |
| 33 | சங்க இலக்கியத்தில் கணவன் மனைவி உறவு | அ. நித்யா | 188 |
| 34 | தமிழ்மகன் புதினங்களில் மனித உறவுகள் | ம. இராஜகோபால் | 194 |

# சங்க இலக்கியத்தில் மனித உறவுகள்

முனைவர் த. கீதாஞ்சலி, எம்.ஏ.எம்;பில்.பிஎச்.டி.
நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி,
பொள்ளாச்சி.

மனிதனும் அவனைச் சார்ந்தோரும் இணைந்தே, ஒரு சமுதாயத்தை உருவாக்க முடியும். இதற்கு அடிப்படையாக அமைவது மனித உறவு. மனித உறவு என்பது உறவுப் பெயர் நிலையில் மட்டும் அமையாமல் ஒருவர் இன்னொருவருக்குச் செய்யும் உதவி, காட்டும் அன்பு, பரிவு போன்றவற்றால் அமையும். தமிழ் இலக்கிய வரலாற்றில் பண்டைய காலத்தில் இருந்து இன்றுவரை எல்லா இலக்கியங்களிலும் மனித உறவுகள் பேசப்படுகின்றன. இன்றைய உறவுகள் பெரும்பாலும் மேலோட்ட நிலையிலேயே இருக்கின்றன. இதற்கு முக்கியக் காரணம் உறவுகள் அங்கங்கே பிரிந்து கிடப்பதுதான். இந்தப் பிரிவுதான் பல உறவுகளின் வேர்களைத் தகர்த்து விடுகின்றன எனவே மனித உறவுகளின் மேன்மையை சங்க இலக்கிய பாடல்களின் வழியாக உணர்த்துவதை நோக்கமாகக் கொண்டு இக்கட்டுரை அமைகிறது.

உறவு என்பது அன்பின் வெளிப்பாடு, பண்பின் செயல்பாடு, நல்ல உறவு முறைகளும் நல்ல உணர்வு முறைகளுமே ஆறறிவு உருவத்தை மனிதனாக்கும். உறவு என்பது மனிதர்களுக்கு உரிய ஒன்று. பிற உயிர்களிடமும் உறவுகள் இருந்தாலும் அவை வாழ்க்கை நெறிகளை உருவாக்குவதாக அமையவில்லை. மனிதனிடம் மட்டுமே உறவுகள் என்பது வாழ்க்கை நெறிகளாக வளர்ந்து உள்ளது. மனித வாழ்கையில் உறவுகள் காலங்களை எல்லாம் கடந்து நிற்கும் சக்தி வாய்ந்ததாக இருக்கின்றது. தொடர்புகள் நிலைக்க ஒன்று பிரிதொன்றுடன் தொடர்பில்லாமல்; வாழ்தல் என்பது இயலாது. ஒன்று பிரிதொன்றைச் சார்ந்து தான் வாழ வேண்டும். அந்த சார்பு நிலையில் ஒழுங்கு அமைய வேண்டும். அதுதான் மனித உறவு. உறவு நிலையில் உண்மை கட்டாயம் இடம்பெற வேண்டும். கணவன், மனைவி, தந்தை, தாய், ஆசிரியர், மாணவர், அண்ணன், தங்கை, அக்காள், தம்பி, பெரியோர், சிறியோர், தெரிந்தவர், தெரியாதவர், தற்செயலாகச் சந்தித்துக் கொள்வோர், ஒன்றாகப் பயணம் செய்வோர், ஓரிடத்தில் பணி புரிவோர் இப்படி பல்வேறு நிலைகளில் மனித உறவுகள் மலர்கின்றன. அவை அனைத்திலும் உண்மை நிலவ வேண்டும். உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று சொல்வார் உறவு கலவாமை வேண்டும் என்பதன் பொருள் அது தான். உண்மை இல்லாமல் போகிற உறவுகள் கொச்சைப்படுத்தப்பட்டு மனிதன் மிருகமாகும் நிலை ஏற்பட்டுவிடுகிறது. அன்பு நிறைந்த ஒழுங்கான குடும்ப உறவுகள் பண்பான வெளி உறவுகள் என்ற நிலையில் காலங்காலமாக மக்கள் வாழ்ந்து வந்துள்ளனர். உறவுகளில் ஒழுங்கு இருக்கிறபோது சிக்கல்கள் வாரா.

ஒழுங்கு தவறுகிற போதுதான் சிக்கல்கள் உருவாகி உறவில் விரிசல்களும் சிதைவுகளும் தோன்றுகின்றன. ஒரு மனிதன் வாழ்கின்ற வாழ்க்கை அறவழியில் அமைய வேண்டுமானால் நல்ல மனித உறவுகளை வளர்த்துக் கொள்ள வேண்டும். மனித உறவுகள் பண்பின் அடிப்படையில் வளர வேண்டும். தனித்து ஒருவன் வாழ்வது வாழ்க்கையல்ல. தனிமரம் தோப்பாகாது. கணவன், மனைவி, குழந்தைகள் எனினும் உறவுகள் வாழ்கிற போதே அது வாழ்க்கையாகிறது. எனவே, மனித வாழ்க்கை என்பதே உறவுகளால் வருவதுதான். உறவுகளிடம் மிகுதியான அன்பு வைக்கும் போதுதான் உறவு வலுப்படும்.

## புலவர்-அரசர் உறவுநிலை

அரசர்கள் புலவர்களை மதித்து, அவர்களின் அறிவுரையைக் கேட்டுப், போற்றினார்கள். அத்துடன் அவர்கள் விரும்பிய பரிசுப் பொருட்களைக் கொடுத்து மகிழ்ந்தனர். அவ்வகையில் குமணன் என்னும் மன்னனைப் பாடி பரிசுப்பெற்று வந்த பெருஞ்சித்தரனார் என்னும் புலவர் கீழ்க்கண்டவாறு பாடுகிறார்.

**“நின் நயந்து உறை நர்க்கும், நீ நயந்து உறை நர்க்கும்**
**பல்மாண் கற்பின் நின் கிளை முதலோர்க்கும்**
**கடும்பின் கடும்பசி தீரயாழ நின்**
**நெடுங் குறியெதீர்ப்பை நல்கியோர்க்கும்**
**இன்னோர்க்கு என்னாது, என்னோடும் சூழாது**
**வல்லாங்கு வாழ்தும் என்னாது , நீயும்**
**எல்லோர்க்கும் கொடுமதி- மனை கிழவோயே**
**பழம் தூங்கு முதிரத்துக் கிழவன்**
**திருந்து வேல் குமணன் நல்கிய வளனே”** (புறம் 163)

அதாவது தாம் பரிசாகப் பெற்று வந்த பொருட்களை மனைவியிடம் கொடுத்து, என் மனைக்கு உரியவளே! பலாப்பழம் மிகுந்த முதிரமென்னும் மலைக்குத் தலைவனாகிய, திருந்திய வேலுடைய குமணன் எமக்கு அளித்த செல்வத்தை நின்னை அன்பு செய்து வாழும் மகளிர்க்கும், நீ அன்பு செய்து ஒழுகும் மகளிர்க்கும், பல குணங்களும் மாட்சிமைக்கப்பட்ட கற்பினையுடைய நின் சுற்றத்து மூத்த மகளிர்க்கும் அளிப்பாயாக. நம் சுற்றத்தின் பசி நீங்க நினக்கு நெடுநாள் கடன் தந்து உதவியோர்க்கும் மற்று இன்ன தன்மையார் என்று கருதாமல் என்னோடு கேளாதும் வளமுடன் வாழலாம் என்று பாதுகாத்து வைத்துக் கொள்ள நினையாது நீயும் எல்லோர்க்கும் வழங்கி மகிழ்வாயாக என்று பெருஞ்சித்திரனார் கூறுகின்றார். பரிசில் பெற்று வந்த புலவர்களும் இரவலர்களும் தாம் மட்டும் அனுபவித்து இன்புற்று வாழ நினைக்காமல் தம்முடைய சுற்றத்தாரும் மற்றவர்களும் இன்புற்று வாழ நினைக்கும் மனநிலையைப் பெற்றிருந்தனர். இது உறவுகளை மதித்து வாழும் பண்பைச் சுட்டுகிறது.

புரவலர்க்கும் இரவலர்க்கும் எப்பொழுது வந்தாலும் எத்தனை முறை வந்தாலும் சற்றும் முகம் கோணாமல் முதல் நாள் சென்றபோது வரவேற்றது போன்றே வரவேற்று உபசரித்துப் பொருள் கொடுத்து அனுப்பும் நல்லுறவை அரசர்கள் மக்களிடம் கொண்டிருந்தனர். இதனைக் கீழ்க்கண்ட பாடலடிகள் எடுத்துக் காட்டுகின்றன.

**"ஒரு நாள் செல்லலம்; இருநாள் செல்லலம்**
**பலநாள் பயின்று, பலரொடு செல்லினும்**
**தலைநாள் போன்று விரும்பினன் மாதோ**
**இழை அணி யானை இயல்தேர் அஞ்சி**
**அதியமான், பரிசில் பெறூம் காலம்**
**நீட்டினும், நீட்டாது ஆயினும், களிறுதன்**
**கோட்டு இடை வைத்த கவளம் போலக்**
**கையகத்தது அது பொய் ஆகாதே**
**அருந்த ஏமாந்த நெஞ்சம்!**
**வருந்த வேண்டா! வாழ்க அவன் தானே!"** (புறம்-101)

இப்பாடல்வழி ஔவையார் அதியமானின் பண்பு நிறைந்த உறவை வெளிப்படுத்துகிறார்.

சிறுபாணாற்றுப்படையில் நல்லியக் கோடனின் சிறப்பையும் பரிசில் வழங்கும் பெருமையையும் எடுத்துரைத்த பாணர்கள், இதனை சிறப்படைய அரசனாகிய நல்லியக் கோடனின் ஊர் வெகுதூரத்தில் இருக்கும் என்று அயர்ந்து விடாதீர். கொஞ்சம் பக்கத்தில் தான் உள்ளது என்று வழிப்படுத்துகின்றனர். மனித உறவுகளுக்கு முக்கியமானது "தம்மைப் போல் பிறரையும் நேசிக்கும் பண்பு' ஆகும். அதனை வெளிப்படுத்துவதாகக்,

**"அயர் மூதூர்**
**சேய்த்தும் அன்று சிறிது நணியதுவே"** (சிறு.பா.202)

என்ற பாடலடிகள் அமைந்துள்ளன.

## தலைவன்-தலைவி உறவு

இயற்கையோடு இயைந்து வாழ்ந்த காலமாகிய சங்க காலத்தில் ஆண், பெண் அன்புறவு நட்பில் மலர்ந்து தோழமையில் தோய்ந்து காதலில் இன்புற்று அறநெறி தவறாத ஒழுக்க வாழ்வாகும். நானிலத்தின் பாகுபாட்டோடு வாழ்ந்த பழந்தமிழர் களவில் தொடங்கி கற்புடை இல்லற வாழ்வில் இனிது வாழ்ந்தனர். சங்க நூல்கள் எல்லாம் இல்லற வாழ்க்கையைத்தான் ஏற்றமுடையதாகக் கூறுகின்றன. அகப்பொருள் பற்றிக் கூறும் நூல்கள் அனைத்தும் இல்லறத்தைப் பாராட்டிக் கூறுவனவே. நாட்டிலே நல்ல அமைதியும் அரசியலும் இருந்தால்தான் ஒவ்வொரு குடும்பமும் நன்றாக வாழ முடியும். இல்வாழ்க்கையைத் திறமையும்

நடத்த வேண்டிய முறைப்படி நடத்தினால் அதைக் காட்டினும் இனிய வாழ்வு வேறு இல்லை.

**"மனையுறை வாழ்க்கை வல்லியாங்கு மருவின்**
**அணியவும் உளவோ"** (குறுந்.322)

அடிகள் இவ்வுண்மையைக் காட்டும். இக்கருத்தே 'அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றின் போஒய்ப் பெறுவ தென்' என்று திருக்குறளிலே அமைந்து கிடப்பதைக் காணலாம். அந்த இல்லறம் சிறப்பாக நடைபெற வேண்டுமானால் தலைவனும் தலைவியும் கருத்தொருமித்தவர்களாக வாழ வேண்டும்.

கணவன் நலத்திலே கருத்துடையவளாயிருப்பவளே கற்புடைய மனைவி. கணவன் பிரிந்து போயிருக்கும் பொழுது அவனிடம் வெறுப்படைய மாட்டாள் அவன் கருதிச் சென்ற காரியத்திலே வெற்றி பெற்று விரைவில் திரும்ப வேண்டும் என்று விரும்புவாள். தன் கணவன் மேல் எவரும் எப்பழியும் சுமத்த இடந்தர மாட்டாள். பொருள்தேட சென்றிருக்கும் காதலர் என்றும் நோயின்றி இனிது வாழ்தல் வேண்டுமென்பதனைக் கீழ்க்கண்ட பாடல்வழி அறியலாம்.

**"அழியா விழவின அஞ்சுவரு மூதூர்ப்**
**பழியிலர், ஆயினும் பலர் புறங்கூறும்**
**ஆம்பல் ஒழுக்கமும், ஆகியர் வெம்சொல்**
**சேரியம் பெண்டிர் எள்ளினும் எள்ளுக**
**நுண்பூண் எருமை குடநாட்டன்ன என்**
**ஆய்நலம் தொலையினும் தொலைக என்றும்**
**நோயிலராக நம் காதலர்"** (பா.115)

இதனால் மனைவியின் உள்ளன்பைக் காணலாம். தனக்கு எது நேர்ந்தாலும், தன் கணவன் இனிது வாழ வேண்டும் என்று விரும்புகின்றனர். இதுவே அன்புள்ள மனைவியின் அருங்குணமாகும்.

கணவன் மனைவி என்பார் என்றும் பிரியாத பேருறவு கொண்டு வாழ்ந்து சிறக்க வேண்டும் என்று குறுந்தொகைப் பாடல் ஒன்று சுட்டகிறது

**"இம்மை மாறி மறுமை ஆயினும்**
**நீ ஆகியர் என் கணவனை**
**யான் ஆகியர் நின் நெஞ்சு நேர்பவவே"** (குறுந்.49)

தலைவனை நம்பி வந்த தலைவியரை காத்தொழுவதே தலைவனின் உண்மையான வீரமென நற்றிணையின் கீழ்க்கண்ட பாடல் கூறுகிறது.

**"நோகோ யானே நெகிழ்ந்தன வளையே**
**செவ்வி சேர்ந்த புள்ளி வெள் அரை**
**விண்டுப் புரையும் புணர் நிலை நெடுங் கூட்டுப்**

பிண்ட நெல்லின் தாய் மனை ஒழிய,
சுடர் முழுது எறிப்பத் திரங்கிச் செழுங்காய்
முட முதிர் பலவின் அத்தம் நும்மொடு
கெடு துணை ஆகிய தவறோ? வை எயிற்று,
பொன் பொதிந்தன்ன சுணங்கின்,
இருஞ் சூழ் ஓதி, பெருந் தோளாட்கே" (நற்.26)

இப்பாடலில் தலைவன் தலைவியை சிறிது காலம் பிரிந்திருக்க நாடிய வேளை தோழி தலைவியின் நிலையினை எடுத்துக் காட்டிக் கூறுவதாவது. நெல்வளமும், இதர வளமும் நிரம்பியது தலைவியின் தாய்மனை. அத்தகைய மனையினைவிட்டு கனல் விட்டெரியும் பாலை நிலத்தினைக் கடந்து பல சிரமங்களுக்கு மத்தியிலும் உன் புறத்தே வந்தவள் தலைவி. இவளுக்கு உன் பிரிவைக் கேட்டதுமே வளையல்கள் கழன்று விடும்படி சோர்ந்துவிட்டாள். உன்னோடு பின் தொடர்ந்து வந்தமைக்கு உண்டாவது இதுவோ? எனத் தெரிவித்து நீ தலைவியினைச் சேர்ந்திருக்க வேண்டும் எனக் கூறுகிறாள்.

பிரிந்து சென்ற தலைவன் தன் வினையிலே வெற்றி பெற்றான். தலைவியிடம்தான் திரும்பி வருவதாகக் கூறிச் சென்றகாலம் வந்துவிட்டது. தனித்திருக்கும் தலைவியைக் கண்டு அவள் கவலையை விரட்ட வேண்டும் என்னும் ஆவல் அவனைத் தள்ளுகிறது. அவன் தேரின் மேல் ஏறி விரைந்து வந்து கொண்டிருக்கின்றான். அப்பொழுது அவன் தன் தேர்பபாகனிடம் விரைவாகத் தேரை ஓட்டும்படி கூறுகின்றான்.

"கேளாய், எல்ல! தோழி! வேலன்
வெறி அவயர் களத்துச் சிறு பல தாஅய
விரவு வீ உறைத்த ஈர் நறும் புறவின்
உரவுக் கதிர் மழுங்கிய கல் சேர் ஞாயிறு
அரவு நுங்கு மதியின் ஐயென மறையும்
சிறு புன் மாலையும் உள்ளார் அவர் என
நப் பலந்து உறையம் வெவ்வம் நீங்க
நூல் அறி வலவ! கடவுமதி உவக்காண்
நெடுங்கொடி நுடங்கும் வான் தோய் புரிசை
யாமம் கொள்பவர் நாட்டிய நளிசுடர்
வானக மீனின் விளங்கித் தோன்றும்
அருங்கடிக் காப்பின், அஞ்சு வரு மூதூர்த்
திருநகர் அடங்கிய மாசு இல் கற்பின்
அரி மதர் மழைக் கண், அமை புரை பணைத் தோள்,
அணங்கு சால், அரிவையைக் காண்குவம்
பொலம்படைக் கலி மாப் பூண்ட தேரே" (அகம்.114)

இப்பாடலில் குதிரைகளைப் பற்றிய நூல்களைக் கற்றறிந்த பாகனே! விரைவாக ஓட்டு. பகைவர்க்குப் பயங்கொடுக்கும் நமது பழமையான ஊரிலே நீண்ட கொடிகள் அசைந்து பறந்து கொண்டிருக்கும். வானை அளவிய மதில் சூழ்ந்திருக்கும். நள்ளிரவிலே காவல் காப்போர் நாட்டியிருக்கின்ற விளக்குகள் வானத்து நட்சத்திரங்களைப் போல ஒளி வீசிக் கொண்டிருக்கும். சிறந்த பாது காவலையுடைய நகரம். இத்தகைய அழகிய நகரிலே அடக்கமுடன் இருப்பவள். குற்றமற்ற அருந்ததி போன்ற கற்புடையவள். ரேகை படர்ந்த சிறந்த குளிர்ந்த கண்களையுடையவள். மூங்கிலைப் போன்ற அழகிய தோள்களையுடையவள். தெய்வமாதைப் போன்றவள். என் காதலியான அரிவை இத்தகையவள். அவள் மகிழ்ச்சி அடையும்படி சென்று காண்போம் என்கிறான். இப்பாடலில் தலைவனுடைய பிரியாத பேரன்பைக் காட்டுகின்றது. அவள் உடல் பிரிந்து போயிருந்தாலும் உள்ளம் அவளுடனே இணைந்தே இருந்தது என்பதைக் காணலாம். தலைவன் தலைவியின் உறவுப் பிணைப்பின் பெருமையினை இதன் மூலம் உணரலாம்

சமுதாய நிலையில் மனித வாழ்க்கையை நோக்கும்போது மனித உறவுகளில் உண்மை இருப்பது இல்லை. போலியான நடிப்பு நிலையில் உறவுகள் வளர்வதால் பலவிதமான சிக்கல்கள் ஏற்படுகின்றன. இளையவர்கள் பெரியவர்களை மதிக்க வேண்டும் என்கிற நியதியைக்கூட இன்றைய காலக்கட்டத்தில் ஏற்றுக்கொள்வது இல்லை. அந்த அளவிற்கு உறவுகளில் நியதிகள் மறுக்கப்படுகின்றன. மேற்கண்ட இலக்கியங்களைத் திறனாய்வதன் மூலம் உறவுகள் மேம்பட இலக்கியக் கருத்தாக்கங்கள் பாதையாக அமையும் என்பதில் ஐயமில்லை.

# இளங்கலை மாணவர்களுக்குத் தமிழ் இலக்கணம் கற்பித்தலில் ஏற்படும் சிக்கல்களும் தீர்வுகளும்




பதிப்பாசிரியர்: முனைவர் த.கீதாஞ்சலி

# இளங்கலை மாணவர்களுக்குத் தமிழ் இலக்கணம் கற்பித்தலில் ஏற்படும் சிக்கல்களும் தீர்வுகளும்

(தேசியக் கருத்தரங்க ஆய்வுக்கோவை)

பதிப்பாசிரியர்

**முனைவர் த. கீதாஞ்சலி**

உரிமை

**ஆசிரியருக்கே**

முதற்பதிப்பு

**மார்ச், 2020**

வெளியீடு

**தமிழ்த்துறை, என்.ஜி.எம். கல்லூரி, பொள்ளாச்சி**

வடிவமைப்பு, அச்சு

**பாலகீதா மீடியா, பொள்ளாச்சி, 99761 44451**

பக்கங்கள் : xx + 280 = 300

விலை: ரூ. 300/-

ISBN : 978-93-87009-60-8

**முனைவர் த. கீதாஞ்சலி**
கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்
தமிழ் உதவிப் பேராசிரியர்,
நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி,
பொள்ளாச்சி - 642001



ஒரு மொழியினைப் பிழையறப் பேசவும், எழுதவும், மொழிப் பிழைகளை நீக்கிடவும், செய்யுள், உரைநடை ஆகியவற்றின்கண் காணப்பெறும் சொற்பொருளை அறிந்திடவும், சொல், தொடர் ஆகியவற்றை முறைப்படி அமைத்திடவும் யாப்பினை அறிந்து கொள்ளவும், பேச்சு வழக்கு, எழுத்து வழக்கு ஆகியவற்றிடையே காணப்பெறும் வேறுபாடுகளை உணர்ந்து கொள்ளவும் இலக்கணக்கல்வி பயன்படுகிறது.

இலக்கணமானது வாழ்க்கையின் இன்றியமையா மொழிப் பயன்பாட்டிற்கும், மொழித்திறன் வளர்ச்சிக்கும், இலக்கியப் பயிற்சிக்கும் பயனுள்ளதாக அமைகின்றது. ஒரு மொழியில் திருத்தமாகவும் செம்மையாகவும் எழுதுவதற்கும், உரையாடுவதற்கும், மொழியின் அமைப்பை முற்றிலும் உணர்ந்து செயல்படுவதற்கும் விதிவிலக்குகளை விளக்குவதற்கும் இலக்கணம் ஒரு கருவியாக அமைகின்றது. மேலும் இலக்கியங்களில் காணப்பட்ட சொல்லமைப்பு, தொடரமைப்பு, கருத்தொற்றுமை, பாடுபொருள், யாப்பமைதி, அயல்மொழிக் கருத்தாக்கம் போன்றவற்றை எடுத்துரைக்கவும் இது பயன்படுகிறது. மேலும் மாணவர்களின் அறிவுவளர்ச்சி, மொழித்திறன், படைப்பாற்றல், கருத்தாடல்திறன் போன்றவற்றைத் தோற்றுவிக்கவும் இது உதவுகின்றது.

இலக்கணம் பயில்வதின் அடிப்படை நோக்கம் மாணவர்களின் கருத்துப் பரிமாற்றத்திறனை வளர்ப்பதாகும். ஆண்டுகள் பலவாகத் தமிழைக் கற்றாலும் மாணவர்கள்

படித்தவற்றின் உட்பொருளை உணரமுடியாமலும், புதியன படைக்கும் திறன் இல்லாமலும், கருத்துக்களை வெளியிடும் திறன் இல்லாமலும் இருக்கின்றனர். இந்நிலையில் தமிழ் வழியாக கற்பிக்கப்படும் பிற பாடங்களின் நுண்பொருளை எவ்வாறு இவர்களால் உணர முடியும்?

இன்றைய மொழியைப் பேசும், கற்கும் மாணவர்களுக்குப் பழைய முறையைப் பின்பற்றிக் கற்பிப்பதும், பழைய இலக்கணத்தைக் கற்பிப்பதும் போதாது. இன்றைய சூழலில் மக்களோடு கலந்து பேசவும், நாம் கற்ற கல்வியை இன்றைய மக்களுக்குக் கொண்டு செல்லவும் இக்கால மொழியமைப்பைக் கற்றுத்தருவது மிகவும் அவசியமாகிறது. இன்று கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் மாணவர்களாலும் ஆசிரியர்களாலும் பெரும்பாலும் புறக்கணிக்கப்படுகின்ற பாடப்பகுதியாக இருப்பது இலக்கணம். இதற்குக் காரணம் நாம் அனைவரும் அறிந்ததே. இன்றைய சூழலில் பேச்சுத் தமிழே அதிக இடம் பெறுகிறது. சமூக ஊடகங்களிலும் இதனையே மாணவர்கள் கேட்கின்றனர். இப்படிப்பட்ட நிலையில், பாடங்களோடு இணைக்கப்பட்ட இலக்கணப்பகுதிகளை விளக்குவதற்காக வரும் எடுத்துக்காட்டுகளும் பழமை வாய்ந்தவையாக உள்ளன. இது மாணவர்களுக்குக் குறிப்பாக கற்றலில் ஆர்வமின்மையையும், சலிப்பையும் ஏற்படுத்துவதற்கு ஏதுவாகிறது.

எனவே இன்றையச் சூழலுக்கும் கருத்துப் பரிமாற்றத்திற்கும் பொருந்துகிற விதத்தில் இலக்கண விதிகளையும், எடுத்துக்காட்டு விளக்கங்களையும் எளிமையாகத் தரவேண்டும். பிறமொழிகளின் குறுக்கீட்டால் தமிழ் கற்றலில் எத்தகைய பின்னடைவைச் சந்திக்க நேரிடுகிறது என்பது குறித்தும், தமிழ் மொழியில் இலக்கணம் கற்றலில் எதிர்கொள்ளும் சிக்கல்கள் என்னென்ன என்பன குறித்தும், அவை கருத்துப் பரிமாற்றத்திற்கு எவ்விதத்தில் தடையாக இருக்கின்றன என்பன குறித்தும் தரவுகள் திரட்டுதல் மிகவும் அவசியம். இவற்றை யெல்லாம் வெளிக் கொணர்ந்து மாணவர்கள் எளிமையாக